**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**நாள். 05.03.2026.**

**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.</u>**
**<u>அசல் வழக்கு எண். 74/2024</u>**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 05ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜானகிராமன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | சுப்பிரமணி | வயது | : | 65 |
| ஊர் | : | எஸ்.வி. நகரம் | தொழில் | : | பட்டுத்தறி |

**<u>வா.சா. 1 (ஜானகிராமன்): வாதி தரப்பில் முதல் சாட்சியின் முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் **வாதி தரப்பு முதல் சாட்சி (வா.சா.1) ஆவேன்.** எனது வாக்கு மூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். எனக்கு எழுத படிக்க தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன்.

**கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

1. 18.02.2025 தேதியிட்ட கனம் செய்யாறு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஐ.ஏ.எண். 674/2014ன் அவஎண். 218/2012ல் வழங்கிய இறுதிநிலை தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
2. 03.02.2017 தேதியிட்ட கனம் செய்யாறு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இ.பி.எண். 57/2015ல் வழங்கிய சுவாதீன ரசீதின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

**தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2026.03.05 17:29:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு